

தமிழ்ச்சிட்டு

தமிழ் படித்தால்
வாழ்வு புதுமைபெறும் !

அறம் பெருகும் தமிழ் படித்தால்
அகத்தில் ஒளி பெருகும்!
திறம் பெருகும்; உரம் பெருகும்;
தீமைக் கெதிர் நிற்கும்
மறம் பெருகும்; ஆண்மை வரும்!
மருள் விலகிப் போகும்!
புறம் பெயரும் பொய்மை யெலா
புதுமை பெறும் வாழ்வே!

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

தூவல்: 2, இசை: 3 15 காசு

MAHARAJA SERFOJI'S ... TANJORE RECEIVED 6 - NOV

உங்கள் மடல்கள்

○ தமிழில் ''சிறுவர் இலக்கியம்'' வளர்ச்சியுற்றுளது; ஆயினும் தமிழ்ப் பண்பை விளக்கும் தமிழ் இலக்கியமாக விளங்க அவை போதுமான தகுதியடைந்தில. இக்குறையை நீக்கத் ''தமிழ்ச்சிட்டு'' முனைந்தெழுந்துள்ளமைப் பாராட்டற்குரியது. பைந்தமிழ்ச் சிறுவர்களின் பிஞ்சுளத்திற் பசுமரத்தாணிபோற் பதியும் வகையில் நற்றமிழ்ப் பண்பையும், நற்பழக்க வழக்கங்களையும் விளக்கிக் கூறும் ''தமிழ்ச்சிட்டு'' தமிழ்ச் சிறுவர்கள் பெற்ற பெரும்பேறு எனில் அது மிகையன்று; உண்மையே.

இ. மறைமலை, அறி. இ., மதுரை–6.

○ தனித்தமிழ்க் குன்றில் இசையாறு பெருகி தமிழ்நெஞ்சை வளமையாக்கும் தங்களின் தனித்தமிழ்த்தொண்டினைக் கண்டு,எங்கள் தமிழுள்ளம் தமிழ்ப்பயிர் எனப் பேருவகை எய்தியது. தி. நா. அறிவு ஒளி, அவர்கள், இருள் நீக்கும் அறிவு ஒளி போன்றவர்.

வாய்மை வளர, தூய்மை தழைக்க வளமை பெருக இளமை மகிழ, நிலையான ஒழுக்கத்தை ஓங்கச்செய்ய ''தமிழ்ச்சிட்டு'' பறந்து சிறந்து வருகிறது. சிறு கதையைத் திங்களுக்கு இரண்டு வெளியிட்டால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

–சி. பூ. மணி, பெங்களூர்-உக.

○ பூக்கள் போன்ற பாக்கள் பூத்துக் குலுங்கும் சிட்டு!
ஆக்கம் தரும் அறிவைத் தேக்கி அளிக்கும் சிட்டு!
சிறுவர் உள்ளந் தன்னில் சிறந்து விளங்கும் சிட்டு!
தேன் மணக்கும் சிட்டு! தென்றல் தமிழ்ச் சிட்டு!

–இல. இராமலிங்கம், ஆசிரியர், சித்தலிங்கமடம், தெ. ஆ.

○ தமிழ்ச்சிட்டைப் படித்த உடனே, எனக்கு ஆயிரம் பொன் கிடைத்தது போல் இருந்தது. சிட்டிலுள்ள ஒவ்வொரு வரியும் ஒவ்வொரு பொன் என்றுதான் சொல்ல வேண்டும்.

–அர. பாலகிருட்டிணன், செல்லஞ்சேரி, கடலூர் வட்டம்.

○ நற்றமிழை அள்ளிஅள்ளித் தருகின் றாய்நீ!
'நாடுமொழி' யென்றுயிரை விடுகின் றாய்நீ!
பெற்றெடுத்த அன்னைமுகத் தில்ம கிழ்ச்சி
பிறக்கச்செய் கின்றாய்நீ! எங்கள் மூத்தோர்
பெற்றஇன்ப மெல்லாம்எங் களுக்கு நல்கி
பெருமைகொள்ளச் செய்கின்றாய்! நாடு போற்றும்
கற்றவர்கள் 'தமிழ்ச்சிட்டே' என்றழைக்கக்
கருத்துமிக்க பொருளெல்லாம் சேர்க்கின் றாய்நீ!

–பெ. தமிழ்ப்பித்தன், போடி–மீனாட்சிபுரம்.

○ உடற்பயிற்சி உடல் நலத்திற்கு எவ்வளவு முக்கியமாக விளங்குகிறதோ, அதேபோல் உள்ளத்திலுள்ள குறைகளைப் போக்கி மனத்திலுள்ள ஆற்றலை வளர்க்க தமிழ்ச்சிட்டும், தென்மொழியும் உதவுகின்றன.

–கோ. சனார்த்தனம், சாத்தனூர்.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை !
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–2 | தி. பி. ௧௯௯௮ துலாம் (ஐப்பசி) அக்டோபர் 67 | இசை–3

அறிவு வேளாண்மை.

தம்பி, தங்கைகளே! உங்களுக்கு வேளாண்மை என்றால் என்னவென்று தெரியுமா? உழவுக்குப் பயன்படாத நிலத்தை உழவுக்குப் பயன் படுவதாகச் செய்வது. எப்படி அதை உழவுக்குப் பயன் படும்படி செய்வது? நிலத்தில் உள்ள பெருங்கற்கள், சிறிய கற்கள் முதலியவற்றை எல்லாம் ஒன்று விடாமல் பொறுக்கி அப்புறப் படுத்தி விட்டு, அதை நன்றாக உழுது, புழுதியை நன்றாக வெயிலிற் காய விட்டு, அதற்கு வேண்டிய எருவிட்டு, நீர் பாய்ச்சி, பழுதில்லாத நல்ல விதைகளைத் தேர்ந்தெடுத்து, அந்நிலத்தில் ஊன்றி, அது விளைந்து வருங்கால் அப்பயிரை ஆடு, மாடுகள் மேய்ந்து விடாமல் காவல் இருந்து, பயிர்களுக்கிடையில் முளைத்துவரும் களைகளை அறவே பிடுங்கி எறிந்து, அதனை வளரச் செய்து, அப்பயிர் முற்றிக் கதிர்கள் விட்டு முதிர்ந்தபின், அவற்றை அறுவடை செய்து, அதன் விளைவை நமக்கும் பிறருக்கும் பயன் படும்படி செய்வதே வேளாண்மை ஆகும்.

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1.

இனி, அறிவு வேளாண்மை என்றால் என்ன தெரியுமா? விளைவுக்குத் தகுதியான நிலம் போன்ற நம் மன வயலில் நம்மையறியாமல் முன்பே வந்து கிடக்கும் செருக்கு, அடங்காமை முதலிய சிறியனவும், பெரியனவுமான கற்களை அறவே பொறுக்கி எறிந்துவிட்டு, அவ்வறிவு நிலத்தை உணர்வு என்ற ஏரால் உழுது பதப்படுத்தி, வேட்கை என்ற வெயிலில் காயவிட்டு, அதன் பின் எண்ணங்கள்(சிந்தனை) என்ற எரு விட்டு, ஒழுக்கம் என்ற நீரைப் பாய்ச்சிப், பழுதற்ற கல்வி என்ற விதைகளைத் தூவி, அது தழைத்து வருங்கால், சோம்பல், தூக்கம் என்ற களைகளை அறவே அகற்றி, அக்கல்விப் பயிரைத் துன்பம், சூழ்நிலைகள் என்ற ஆடுமாடுகள் மேய்ந்து விடாமல், ஊக்கம், நம்பிக்கை, முயற்சி என்ற வேலிகள் இட்டுக் காத்து வந்தால் அறிவு என்ற பயிர் நன்றாகத் தழைத்து, வளர்ந்து, முதிர்ந்து விளைவு தரும். அதன்பின் அவ்வறிவுக் கதிர்களை அடித்து, அதனின்று வெளிவரும் அறிவு மணிகளைக் கூட்டி எடுத்து, அவற்றை நம் உயிர் வளர்ச்சிக்காகவும், நம் போல் அறிவு உழவு செய்யத் தெரியாத பிறரின் உயிர் வளர்ச்சிக்காகவும் பயன்படும்படி செய்வதே அறிவு வேளாண்மை ஆகும்.

தம்பி, முந்தி சொன்ன பயிர் வேளாண்மை நம் உடல்களை வளர்ப்பது. பிந்தி சொன்ன அறிவு வேளாண்மையே நம் உயிரை வளர்ப்பது. எனவே பயிர் வேளாண்மை நம் உடலுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு தேவை நம் உயிர் வளர்ச்சிக்குத் தேவையான அறிவு வேளாண்மையும். இவ்வுலகில் உள்ள மக்கள் எல்லாரும் அறிவு வேளாண்மை செய்யத் தகுதிபெற்றிருந்தாலும், பெரும்பாலார் அதைப் பற்றிக் கவலைப்படாமல், உடல் வளர்ச்சிக்கு வேண்டிய முயற்சிகளையே செய்து வருகின்றனர். காரணம் அவர்கள் அறிவு வளர்ச்சியைவிட, உடல் வளர்ச்சியையே மிகத் தேவையாகக் கருதுவதுதான்.

அவர்கள் உடல் தேவையே முதல் தேவை என்று கருதுவதற்கு வேறொரு காரணமும் உண்டு. உடல் வளர்ச்சிக்கும், ஊட்டத்திற்கும் வேண்டிய உணவுப் பொருள்களை நாம் உண்ணாத பொழுது, உடல் வலுக்குன்றி, சோர்வடைந்து போகின்றது. அப்படி வலுக்குன்றிய உடலைப் பலவகையான நோய்களும் வந்து பற்றி வருத்துகின்றன. எனவேதான், மக்கள் அவ்வுடல் வருத்தத்தையும், நோய்த்துன்பத்தையும் பொறுக்க முடியாமல், இவ்வுடல் அவ்வகையான தொல்லைகளைப் படாமல் இருக்கும் பொருட்டுப், பலவகையான உணவுப் பொருள்களையும் மருந்துகளையும் அரும்பாடு பட்டுத் தேடி, உண்டு உடல் ஊட்டமும், நோய் நீக்கமும் பெறுகின்றனர். உடலைக் காவாததால் ஏற்படும் துன்பம் அவர்கள் அறியக்கூடும் வகையில் வெளிப்படையாகத் தென்படுவதால் அவர்கள் அவ்வகைத் துன்பங்களையே பெரிதென்று கருதி, அவற்றைப் போக்கிக் கொள்வதிலேயே தங்கள் வாழ்நாள் முழுவதையும் வீணே கழிக்கின்றனர்.

சிறுவர்களே! பயிர் வேளாண்மை செய்யாமற் போனால் எப்படி உடல் ஊட்டம் குறைந்தும், நோய் மிகுந்தும் போகுமோ, அப்படியே அறிவு வேளாண்மை செய்யாமற் போனால் உயிர் அல்லது மனமும் ஊட்டம் குறைந்தும், நோய் மிகுந்தும் பலவகையான துன்பங்களை அடைகின்றது. இந்த நோயும் அதனால் வரும் துன்பங்களும் அவர்களுக்கு வெளிப்படையாகத் தெரியாவாதலால்தான், அவர்கள் அவற்றைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளைப் பற்றிக் கவலைப்படாதவர்களாக இருக்கின்றனர். தம்பி, மன நோய் வந்தவர்களைப் பற்றியும், திருட்டு, தீயொழுக்கம், கொலை,புன்செயல்கள் முதலியவற்றைச் செய்பவர்கள் பற்றியும் கேள்விப் பட்டிருக்கின்றீர்கள் இல்லையா? இவைதாம் மனம் என்னும் நிலத்தை வேளாண்மை செய்யாமல் வெறுமனே போட்டு விடுவதால் வரும் நோய்கள், கேடுகள், துன்பங்கள். ஆனால் இந் நோய்களால் வரும் துன்பங்களோ, கேடுகளோ வந்து அவர்களை வருத்தும் பொழுது, அவர்கள் இன்னின்ன காரணங்களால்தாம் அவை வந்தன என்பதை அறியாமல் போகின்றன. எனவேதான் அவர்கள் அறிவு வேளாண்மையைப் பற்றிக் கவலைப் படாமல் போகின்றனர். தம்பி, குருடன் விளக்கைப் பற்றிக் கவலைப்படுவானா? அதுபோலவே மனக் குருடனும் அறிவு விளக்கைப் பற்றிக் கவலைப்படமாட்டான். இப்படியெல்லாம் நாம் இருத்தல் கூடாது. நாம் அறிவுக் குருடரும் அல்லர்; அறிவு வேளாண்மை செய்யாமல் காலத்தை வீண் போக்கும் சோம்பேறிகளும் அல்லர். இன்னும் சொன்னால் நாம் அவ்வாறு வேளாண்மை செய்ய முடியாத கிழவரும் அல்லர். நல்ல இளமையானவர்கள்; உடல் வளம் உள்ளவர்கள். உடல்வளம் மட்டும் இருந்து மனவளம் இல்லாமற் போனால் எவ்வெவ்வகையான நோய்கள் நம்மை வந்து பற்றும், அவை நம்மை எப்படி எப்படி ஆட்டி வைக்கும், எவ்வளவு துன்பங்களை நமக்குத் தரும் என்பன பற்றியெல்லாம் ஓரளவு உணர்ந்தவர்கள்.

எனவேதான், சிறுவர்களே! நமக்கு வேளாண்மைக்குரிய காலம் இருக்கிறது; முயற்சி இருக்கிறது; தேவைகளும் தெரிந்து இருக்கின்றன. இனி, நாம் செய்ய வேண்டுவதெல்லாம் அறிவைப் பயிர் செய்ய வேண்டியதுதான். அறிவைப் பயிர் செய்யக் கல்வி விதையைத் தேடி, அல்லது விலைகொடுத்து வாங்கி உங்கள் மனவயலில் இப்பொழுதிருந்தே பயிர் செய்யுங்கள். அதற்கு முன், உங்கள் மன வயலை எப்படி எப்படித் தூய்மை செய்து, துப்புரவாக்கி, உழவுக்குத் தகுதியுடையதாகச் செய்து கொள்ளவேண்டும் என்பதை இரண்டாவது பத்தியில் கூறினேன் இல்லையா? அதை மீண்டும் ஒருமுறை நன்றாகத் திருப்பிப் படித்துக் கொள்ளுங்கள். அதன்படி செய்து வாருங்கள். இடையில் விழும் பூச்சி, புழுக்களைப் பற்றியும் பிற சேதங்களைப் பற்றியும் அவற்றை எப்படி ஒழிப்பது என்பதைப் பற்றியும் அவ்வப் பொழுதைக்குச் சொல்கின்றேன். —பெருஞ்சித்திரன்.

வீட்டைக் கட்டினான்.

மண்ணைப் பிசைந்தான்;
    கல்லை உடைத்தான்;
'மள மள'வென்றே சுவர் வைத்தான்!

திண்ணை அமைத்தான்;
    படிகள் வைத்தான்;
தண்ணீர்த் தொட்டி ஒன்றமைத்தான்!

மரத்தைப் பிளந்தான்!
    பலகை அறுத்தான்!
'மழ மழ'வென்றே அதை இழைத்தான்!

அரத்தைக் கொண்டும்,
    ஆணிகள் கொண்டும்
அழகுக் கதவுகள் பல செய்தான்!

கம்பியை வளைத்தான்;
    பலகணி செய்தான்!
கட்டி முடித்தான் ஒரு வீட்டை!

துரை-மாணிக்கம்

காக்கை !

கன்னங் கருநிறக் காக்கை !
காலையில் கரைந்திடும் காக்கை !
சின்னஞ் சிறிய புழுக்களைச்
சோளம் கம்பு மணிகளைக்

கொத்தித் தின்று வாழ்ந்திடும் !
கூடு கட்டி வாழ்ந்திடும் !
எத்தித் திருடி வாழ்ந்திடும் !
இனத்தைக் காத்தே வாழ்ந்திடும்!

கா, கா என்பதே அதன்மொழியாம்;
காடும் மேடும் அதன்நாடாம் !
பார்க்கும் பொருள்கள் அதன்பொருளாம் !
பகுத்தே உண்பது அதன்அருளாம் !

காசுகள் பெருமல் கனிகொடுக்கும்
காட்டு மரங்கள் அதன்கடையாம் !
மாசுகள் இல்லா நன்முறையில்,
மாண்புற வாழ்வதே அதன்வாழ்வாம் !

நாளும் நாமும் காக்கையைப்போல்
நன்ருய் ஒன்ருய் வாழ்ந்திடுவோம் !
ஆளுமை முறையில் உணவுகளை
அனைவரும் பகுத்தே உண்டிடுவோம்.

[பாவை-நடவரசன்]

பெரியோர் கதை!

எமர்சன்

[அ. பொன்னையன்.]

தமிழ்ச்சிட்டுகளே !

உங்களைப் போல ஓடியாடி, துருதுரு வென்ற உள்ளத்தோடு படித்துக் கொண்டிருந்தான், சிறுவன் ஒருவன். அவன் மிகவும் ஏழை; உண்ண உணவில்லை; உடுக்க உடையில்லை. என்றாலும் உறவினரின் உதவியால் படிக்க வாய்ப்புக் கிட்டியது. பள்ளிக்குச் செல்லும்போது, அவன் உங்களைப் போல் சட்டைப் போட்டுக் கொண்டு செல்ல விரும்பினான். ஆனால் சட்டை யில்லை. தன் அண்ணன் சட்டையைப் போட்டுக் கொண்டு சென்றான். அஃது அவனுக்குப் பொருத்தமில்லாமையைக் கண்டு செல்வச் சிறுவர்கள் எள்ளி நகையாடினர். அவன் அவர்கள் அறியாமைக்கு வருந்தினான். வாய்திறந்து ஒன்றும் பேசவில்லை.

இவ்வாறு ஏழ்மையில் வருந்திய அவன், பிற்காலத்தில் பேரறிஞனாக, மெய்யறிவாளனாக – உலகத்தில் திகழ்ந்தான். அவன் யார் என்று உங்களுக்குத் தெரியுமா ? அவன்தான் பிற்காலத்தில் பேரும் புகழும் பெற்றுத் திகழ்ந்த எமர்சன். எமர்சன் 25-5-1808-இல் அமெரிக்காவில் உள்ள போசுடன் (BOSTON) நகரத்தில் பிறந்தார். அவர் தந்தையின் பெயர் வில்லியம் எமர்சன்; தாயின் பெயர் உருத் அம்மையார். தாயார் வைத்த பெயர் இரால்ஃப் என்பதாகும்; தந்தையிட்ட பெயர் வால்ட்டோ என்பதாகும்; குடும்பச் சிறப்புப் பெயரும் சேர்ந்து இரால்ஃப் வால்ட்டோ எமர்சன் என்று அழைக்கப்பட்டார்.

எமர்சன் மேரி மூடி என்ற தன்னுடைய அத்தையாலும் பெற்றோராலும் அன்போடும் பண்போடும் வளர்க்கப்பட்டார். அவருடைய ஏழாவது அகவையில் குடும்பத் தலைவரான அருமைத் தந்தை இறந்துவிட்டார். எனவே குடும்பத்தைத் தாயினால் செப்பமாக நடத்த முடியவில்லை; வறுமையே குடி கொண்டது.

எமர்சனும் அவருடைய இளவலும் ஓர் உறவினர் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு மிகவும் நல்ல முறையில் நடத்தப் படும் இலத்தீன் பள்ளி ஒன்றில் சேர்ந்து படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அங்குத்தான் மாணவர்களால் எள்ளப்பட்டார். பிறரால் இளக்கார மாக நினைக்கப்பட்டாலும் கள்ளங் கவடில்லாமல் அனைவரோடும் பழகினார்; விளையாடுவதில் ஆர்வங் காட்டினார். அவ்விளமைப் பருவத் திலேயே, கடமைகளை ஒழுங்காகச் செய்யவும் கற்றுக் கொண்டார். அவர் தம் வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு துன்ப நிகழ்ச்சியை யும் எண்ணிப் பார்த்து, அதற்குரிய அடிப்படைக் காரணத்தை ஆராயலானார். இப்பழக்கம் பிற்காலத்தில் அவர் தம் மெய்யறிவுக்கும், தன்னம்பிக்கைக்கும் ஊன்று கோலாக அமைந்துவிட்டது.

எமர்சன் சேர்ந்து படித்து வந்த பள்ளியும் உடனடியாக மூடப் பட்டது; மீண்டும் போசுடன் நகரத்திலேயே வந்து படித்தார். பதி னான்காம் அகவையில் கார்வார்டு (HARVARD) பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். நான்காண்டுகள் கற்றுப் பதினெட்டாம் அகவையில் பட் டம் பெற்றார். உடனே ஆசிரியராகப் பணிபுரியலானார். அத் தொழிலை அவர் விரும்பாவிட்டாலும் வேறு வேலை எதுவுங் கிடைக்காததால் தொடர்ந்து காலங் கழித்து வந்தார். ஒருநாள் ஒரு பேரழகியைக் கண்டு, அவளிடம் அன்பு கொண்டார். பிறகு அவளையே மணந்து கொண்டார். அவள் பெயர் எல்லன் உலூயிசா தக்கர் என்பதாகும். பின் சமய குரவரானார்.

எமர்சனும் எல்லனும் பெற்றாரும், உற்றாரும், நண்பர்களும் பாராட்ட, இன்ப வாழ்வு வாழ்ந்தனர். "இன்பமே நீடிக்காது; இன்ப மும் துன்பமும் இணைந்ததுதான் வாழ்க்கை'' என்னும் பொதுவான உண்மைப்படி எத்துணை இன்பம் எமர்சன் அடைந்தாரோ அத்துணைக் கும் மிகுதியான பெருந்துன்பத்தை ஏற்க வேண்டியவரானார். எலும் புருக்கி நோயால் மனைவி எல்லன் 1831-இல் இறந்து விட்டார். கவலையே உருவெடுத்த மாந்தராய் மாறிவிட்டார். சமய குரவர் (மத போதகர்) பணியையும் உதறினார்.

இனி, அவர் அற நூல்களில் நாட்டஞ் செலுத்தினார். இலக்கிய இதழ்களுக்குக் கட்டுரைகள், பாட்டுகள் எழுதினார். மெய்யறிவின் அடிப்படையில் சொற்பெருக்காற்றினார். இடைவிடாமல் நல்ல நூல்

களைப் படித்தார். அதனால் "மாந்தனே கடவுள்" என்று பேசத் தொடங்கினார். அப்போதுதான் அவரைத் தன்னம்பிக்கை யுடையவ ராக்கிய கட்டுரை ஒன்றைப் படித்தார். அது கார்லைல் (CARLYLE) என்ற பேரறிஞரால் எழுதப்பட்டது. அதில், "மனச்சான்றுக்கு மாறில்லாமல் நடப்பதுதான் அறிவுடைமை. மனச்சான்றுக்கு மாறாக ஒரு செயலைச் செய்வது நல்லதன்று; அஃது அறிவுடைமையாகாது. நான் என் மனச்சான்றின் கூற்றுகளின் படியே நடக்கின்றேன்; அதற்கு மாறாக ஒன்றும் செய்யமாட்டேன். இறைவன் அருள் எனக்கு உறுதியாகக் கிடைக்கும்" என்னும் கருத்து எமர்சனின் உள்ளத்தைத் தொட்டது. அதனால் இத் தொடர்களை எழுதி வைத்துக் கொண்டார். அஞ்சாமல் எண்ணியதைச் சொல்லத் தொடங்கினார்.

ஐரோப்பா முழுவதையும் சுற்றிப்பார்த்தார். அதன் பட்டறிவால் "இயற்கையின் பயன்" என்ற நூலில் உலகிற்கும் உளத்திற்கும் உள்ள தொடர்பை விளக்கினார். அவருடைய சொற்பொழிவில் உள்ள உண்மைகளைக் கண்டு வியந்து இலிடியா சாக்சன் என்ற பெண்மணி மணந்து கொண்டாள். எமர்சன் சிறந்த உண்மைகளைப் பரப்பும் பொருட்டு தியல் (DIAL) என்னும் இதழைத் தொடங்கி நடத்தினார். அதில் எவராலும் மறுக்க முடியாத மெய்யறிவுக் கட்டுரைகளை வெளியிட்டார்.

"விரும்பத்தக்க அறிஞர்கள்" என்றொரு நூலை வெளியிட்டார். எமர்சன் அறுபத்தாறாவது அகவையில் நிகழ்த்திய சில சொற்பொழிவுகள் மக்கள் மனதில் பதிந்தன. அதனால் கார்வார்டு பல்கலைக் கழகம் அவருக்குப் பண்டாரகர் (டாக்டர்) பட்டமளித்தது.

எமர்சன் எழுதிய நூல்களும் கட்டுரைகளும் பாட்டுகளும் பன்னிரண்டு பிரிவுகளாக வெளியிடப் பட்டுள்ளன. இயற்கை, அமெரிக்கப் புலவர், குறிப்பிடத் தக்கவர்கள், வாழும் வகை, தன்னம்பிக்கை போன்ற நூல்கள் மிகச் சிறப்புடையவை. அவருடைய நூல்கள் மெய்யறிவை, உள்ளது உள்ளவாறே விளக்கும் கண்ணாடியாகும். எழுபது ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் பொதுத் தொண்டு செய்வதில் அக்கறை காட்டினார். அதனால் வரவர உடல் நலம் கெட்டது; கண்கள் ஒளி இழந்தன. அவரால் எழுத முடியவில்லை. ஆயினும் கடமைகளைத் தவறாது செய்த பெருமித உணர்வோடு நெருப்புக் குழியின் அருகில், குளிர்காய்ந்து கொண்டிருந்த நிலையிலேயே 27-4-1882இல்

உலக வாழ்வை நீத்தார். ஈடு செய்ய முடியாத அவரது இழப்பைத் திருக்கோவிலின் மணிகள் எழுபத்தொன்பது முறை ஒலித்துத் தெரிவித்தன.

அன்புத் தம்பி தங்கைகளே! அருந்தமிழ்ச் சிட்டுகளே!

நீங்களும் எமர்சனைப் போல் உண்மை வாழ்வை வாழ வேண்டு மன்றோ? எண்ணமும் சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டு மன்றோ? எமர்சனின் வாழ்வைப் பின் பற்றுங்கள்.

''வெற்றியின் முதல் அடிப்படை தன்னம்பிக்கையாகும். வெற்றி யின் மற்றொரு பண்பு உண்மையாகும்''

''தங்களை ஏழை என்று எண்ணுபவரே ஏழைகள். ஏழ்மை உணர்ச்சிதான் உண்மையான வறுமையாகும்''

—பேரறிஞர் எமர்சன்.

அறிஞன் நெப்போலியன்.

[திருநாவலூர் வேல். அரவரசன்.]

அப்போது நெப்போலியன் பொதுவான ஒரு போர்மறவன். ''நான் என் நாட்டைக்காக்க, என் உயிரையும் கொடுப்பேன்''. படைத் தலைவன் முன் ஒவ்வொரு மறவனும் எடுத்துக் கொள்ள வேண்டிய 'உறுதி மொழி' இது. நெப்போலியன் முறை வந்தது. இப்படிச் சொல்ல அவன் மறுத்தான். சிறந்த மறவனான நெப்போலியனின் கூற்றைக் கேட்டு அனைவர் தம் விழிகளும் வியப்பால் விரிந்தன.

காரணமறியக் காத்திருக்க இயலவில்லை படைத் தலைவனால். 'ஏன் ?!' எனக் கோட்டை அதிருமளவில் சீற்றத்துடன் வினவினான். நெப்போலியன், அடக்கமாக, ஆனால் அழுத்தமாக... 'என் நாட்டைக் காக்க என்னுயிரைத் தரமாட்டேன்; எதிரிகளின் உயிர்களைத்தான் வாங்குவேன்' என்றான். படைத்தலைவன் முகம் வியப்பால் மலர்ந்தது. அச் செயலைக் கேட்ட அனைவருமே அவனைப் பாராட்டினர்.

அத்தகைய உறுதிமிக்க உள்ளந்தான் பிற்காலத்தில் அவனைப் படைத்தலைவனாக ஆக்கிற்று. பிள்ளைகளே, நீங்களும் உங்கள் கடமை களை உறுதியுடன் செய்யுங்கள். மனத்தளர்வு நமக்கு வெற்றியைத் தராது. சோர்வையும் தோல்வியையுமே தரும். *

உயிரினங்களின் ஓசை.

[தொகுப்பு: சி. பூ. மணி. பெங்களூர் – உக.]

அகவுதல் – மயில்.
அலப்புதல் – குரங்கு.
அலறுபவை – ஆந்தை, கழுகு.
உறுமுகின்றவை – கரடி, பன்றி, முள்ளம் பன்றி, புலி.
ஊளையிடுபவை – ஓநாய், குள்ளநரி.
எக்காளம் போடுதல் – எருது.
கத்துபவை – கழுதை, கழுதைபுலி, கன்றுக்குட்டி,
ஆடு, ஆட்டுக்குட்டி, பூனை, தவளை, வாத்து (Duck)
கதறுதல் – ஆ (பசு)
கனைத்தல் – குதிரை.
கரைதல் – காகம்.
கீச்சிடுதல் – எலி, குருவி.
குரைத்தல் – நாய்.
கூவுபவை – சேவல், குயில், வான்கோழி.
குனுகுதல் – புறு.
கொக்கரித்தல் – பெட்டைக்கோழி, வாத்து(Geese)
சீறுதல் – அரவம் (பாம்பு), புலி.
இடித்தல்–அரிமா(சிங்கம்), முகில்.
பாடுதல் – வானம்பாடி.
பிளிறுதல் – யானை.
பேசுதல் – மாந்தன், கிளி.
முரலுதல் – தேனீ.

உயிரினங்கள் கருவில் வளரும் காலம்:-

மாந்தன்	10 திங்கள்.
மாடு	9 திங்கள்.
நாய்	9 கிழமை.
ஓநாய்	2 திங்கள்.
பூனை	2 திங்கள்.
யானை	21 திங்கள்.
பெருமுயல்	8 திங்கள்.
குழி முயல்	1 திங்கள்.
கழுதை	1 ஆண்டு.
குதிரை	11 திங்கள்.

குரங்கு	7 திங்கள்.
குள்ளநரி	61 நாட்கள்.
வெள்ளாடு	5 திங்கள்.
செம்மறியாடு	5 திங்கள்.
ஒட்டகம்	12 திங்கள்.
ஒட்டைச்சிவிங்கி	14 திங்கள்.
பன்றி	4 திங்கள்.
கரடி	6 திங்கள்.
அரிமா	108 நாட்கள்.

சொல்லுங்கள் பார்ப்போம் !

இரா. வ. சனர்த்தனம், பள்ளி நேலியனூர்.

கீழே உள்ள பெயர்களைக் குறிக்கும் நாடு, நகரம், இடம் இவற்றைச் சொல்லுங்கள் பார்ப்போம்.

1 தென்னிந்தியாவின் தோட்டம்.
2 தென்னிந்தியாவின் மான்செ்ஃச்டர்.
3 கிழக்கு நாடுகளின் பிரிட்டன்.
4 மிகாங் ஆற்றின் நன்கொடை.
5 உலக ஒன்றிப்புக் கழகத்தின் (ஐ.நா.) குழந்தை.
6 பிரான்சின் களஞ்சியம்.
7 ஆப்பிரிக்காவின் கொம்பு.
8 உலகின் விளையாட்டு அரங்கம்.
9 உலகின் கூரை.
10 உலகின் அச்சு முனை நாடு.

விடைகள்:

1 தஞ்சாவூர்.
2 கோவை.
3 சப்பான்.
4 வியட்நாம்.
5 இந்தோனிசியா.
6 இலூவர் பள்ளத்தாக்கு.
7 சோமாளிலாந்து.
8 சுவிட்சர்லாந்து,
9 பாமீர் முடிச்சு.
10 வர்கோயாவ்.

உங்களுக்குத் தெரியுமா?

தொகுப்பு:– திருவாட்டி: மே. பிளாரன்சுதாசு (மு.க.) தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

1 குருதி சிவப்பாயிருக்கும் என்று எல்லார்க்கும் தெரியும். ஆனால் ஒரே ஓர் உயிரியின் குருதி மட்டும் வெண்மையாய் இருக்கும். அதுவே கரப்பான் பூச்சி (Cockroach). அதன் குருதியில் சிவப் பணுக்கள் இன்மையே நிறமின்மைக்குக் காரணம்.

2 மீன், ஆமை, ஆகியன அசைவற்ற நாக்கை உடையன.

3 தவளைக்கு மேல் தாடையில் மட்டுமே பற்கள் உள.

4 மண் புழுவிற்குக் கண் இல்லை. ஆனாலும் அதன் உடலின் முற் பகுதிக்கு வெளிச்சத்தை உணரும் தன்மை உண்டு.

5 உடலில் பித்தப்பை இல்லாத ஒரே பறவை புறா.

6 உயிரினங்கள் மூக்கு வழியாக உயிர்த்தல் இயல்பு. ஆனால் நீர், நிலம் வாழ் உயிரினமாகிய தவளை தோல், மூக்கு, வாய் இவற்றின் வழியாக உயிர்க்கிறது.

7 காது வெளிப்படையாகத்தெரியும் விலங்கு மட்டுமே குட்டிபோடும்.

தெரிந்து கொள்ளுங்கள்.

O பொதுவாகக் கொசு உட்காரும் பொருளின் மேற்பரப்புக்கு ஓரளவு கிடையாகத் தன் உடலை வைத்துக் கொண்டிருக்கும். ஆனால் நச்சுக் காய்ச்சலை(மலேரியாவை)உண்டுபண்ணும் கொசு தன் தலையைக் கீழாகச் சாய்த்தும் வால்புறத்தை மிக மேலே உயர்த்திக் கோண வாகில் வைத்துக்கொண்டும் அமரும்.

O மழைக்காலங்களில் வயல்களிலும் குட்டைகளிலும் கத்திக் கொண்டிருக்கும் தவளைகள் எல்லாம் ஆண் தவளைகளே. பெண் தவளைகள் ஒலி செய்வதில்லை.

O பெண் அரணை சாம்பல் பழுப்பு நிறமும், ஆண் அரணை பசிய நிறமும் கொண்டிருக்கும்.

O பச்சைப்பாம்புக்கு நஞ்சு இல்லை. அதனால் அதைக் கையால் பற்றித் தூக்கினாலும் அது கடிப்பதில்லை. O

பிழையில்லாமல் எழுதுங்கள் பேசுங்கள்

-புலவர். தி. நா. அறிவு ஒளி-

வல்லின 'ற' கர மெய்(ற்)யெழுத்தின் பின் தனி ஒற்றெழுத்து வராது, 'தெற்க்கு' என்பது பிழை; 'தெற்கு' என்பதே சரி. 'நாற்ப் புறம்' என்றெழுதாமல் 'நாற்புறம்' என்றெழுதுக.

'ர — ற, ல — ள, ந — ன, ழ — ள, ண — ன' -இவ்வெழுத்துகளால் பல பிழைகள் அமைகின்றன. ஒரெழுத்துக்கு மாருக இன்னொரு எழுத்தை எழுதினுல் சொல்லும், பொருளும் மாறிவிடும்.

ர - ற

அரம்–ஓர் இரும்புக் கருவி
அறம்–கடமை
குரம்–குளம்பு
குறம்–குறி கூறுதல், ஒரு வகைச் சிற்றிலக்கியம்
புரம்–நகர்
புறம்-வெளி
மரம்–தரு
மறம்–வீரம்
பரவை–கடல்
பறவை–பறக்கும் உயிரி
அரா–பாம்பு
அரு–நீங்காத
அரி–பிள
அறி–தெரி
அரை–பாதி
அறை–வீட்டின் சிற்றறை
ஆரை–ஒரு கீரை
ஆறை–ஆற்றூர்
இரவு-இரவுநேரம், இரந்துண்ணல்
இறவு–இறப்பு
இரை–உணவு, ஒலி
இறை–தலைவன், தங்கு
உரி-பிரி
உறி–சிக்கம், கயிற்றுறி
உரை–சொல்
உறை–வாழ், மூடி
எரி–நெருப்பு
எறி–வீசு
ஏரி- நீர் நிலை
ஏறி-ஊர்ந்து
ஒரு–ஒன்று
ஒறு–தண்டனைசெய்
கரி–சான்று, தீய்ந்த கரி
கறி-காய்கறி, ஊன்
கரு–முதற்பொருள்
கறு-சீறு

கரை-அணை
கறை-களங்கம்
கீரி-ஓர் உயிரி
கீறி-பிளந்து
குரை-ஒலி
குறை-முடியாதது
கூரை-வீட்டு மேற்பாகம்
கூறை-ஆடை
கோருதல்-வேண்டுதல்
கோறுதல்-கொல்லுதல்
தரி-தங்கு
தறி-வெட்டு
திரை-அலை
திறை-கப்பம்
நிரை-வரிசை
நிறை-ஒழுக்கம்
பரி-குதிரை
பறி-பற்று
பிரை-துளி
பிறை-இளந்திங்கள்
மரு-மணம்
மறு-தடு
மரை-மான்
மறை-ஒளி
மாரி-முகில்
மாறி-மாறுபட்டு
முரி-ஒடி
முறி-தளிர், திரிதல்
வரம்-நன்மை
வறம்-வறுமை
வரை-மலை, மூங்கில்
வறை-வறுவல்
வேரல்-மூங்கில்
வேறல்-வெல்லுதல்

ன - ண

அனல்-நெருப்பு
அணல்-நெருங்குதல், தாடி
ஆனி-ஒரு மாதம்
ஆணி-ஒரு கருவி
இனை-வருந்து
இணை-இரட்டை
கனி-பழம்
கணி-கணக்கன்
கனை-ஒலி
கணை-அம்பு
கானம்-காடு
காணம்-கொள் (பயிறு)
கானல்-கடலோரம், வெப்பம்
காணல்-பார்த்தல்
கான்-காடு
காண்-பார்
கோன்-தலைவன்
கோண்-கோணல்
சுனை-நீர் நிலை
சுணை-வைக்கோற் சுணை
தினை-ஒருவகைக் கூலம்
திணை-ஒழுக்கம்
துனி-பிணக்கு
துணி-துண்டு
துனை-விரைவி
துணை-உதவி, ஆதரவு
நனி-நன்றாக, மிகுதி
நணி-நெருங்கி
நான்-தன்மைப் பெயர்
நாண்-வெட்கம், கயிறு
நானம்-மான்மதம் (கத்தூரி)
நாணம்-வெட்கம்
பனி-குளிர்ச்சி

பணி-வணங்கு
பனை-ஒருமரம்
பணை-பருத்தல்
புனை-அழகுசெய்
புணை-தெப்பம்
பேன்-தலையிலிருக்கும்ஒருசிற்றுயிரி
பேண்-ஆதரவு செய்
மனம்-உள்ளம்
மணம்-நாற்றம், திருமணம்
மனை-வீடு
மணை-பலகை
வனம்-காடு
வணம்-அழகு
வானம்-விண்
வாணம்-பாணம், வேட்டு

ல, ள, ழ வேறுபாடு

அலகு-பறவையின் மூக்கு, துடைப்பம், அளவு
அளகு-பெட்டைக் கோழி
அழகு-வனப்பு
அலி-ஆணும் பெண்ணும் அற்ற வடிவம்
அளி-அருள், கொடு
அழி-துடை, ஒழி
அலை-திரை
அளை-புற்று
அழை-கூப்பிடு
ஆல்-ஒரு மரம்
ஆள்-ஆட்சிசெய், ஆடவன்
ஆழ்-முழுகு
ஆலி-நீர்த்துளி
ஆளி-ஆள்பவன், ஒரு விலங்கு
ஆழி-கடல், சக்கரம், விரல்மணி
இலை-தழை
இளை-மெலி
இழை-நூலின் சரடு
உலை-வருந்து, அரிசி உலை
உளை-பிடரி மயிர்
உழை-பெண் மான்
கலி-ஆரவாரம், ஒருவகைப்பா
களி-மகிழ்
கழி-நீக்கு
கலை-ஆண்மான்
களை-நீக்கு
கழை-மூங்கில்
காலி-பாழ், கால்களையுடையஉயிரி
காளி-ஒரு தெய்வம்
காழி-சீர்காழி
கிலி-அச்சம்
கிளி-ஒரு பறவை
கிழி-துண்டாக்கு
தாலி-மகளிர் அணி
தாளி-பொரித்தல் செய்
தாழி-மிடா
உளவு-மறைவு, ஒற்றறிதல்
உழவு-பயிர்த்தொழில் முயற்சி, வருத்தம்
உலர்-வெயில்காய்
உளறு-பிதற்று
உளி-தறிக்குங் கருவி
உழி-இடம், 7ஆம் வேற்றுமை யுருபு
கிளவி-சொல்
கிழவி-உரியவள், முதியவள்
கீள்-கோவணம், தோண்டு
கீழ்-கீழே, தாழ்வு
குளவி-வண்டுவகை
குழவி-குழந்தை

(வளரும்)

சென்ற மாதப் புதிரின் விடை:

விடை: 14 கற்கள்.

சென்ற மாதப் புதிரை எழுதிய தங்க. சங்கரபாண்டியன் (சுவால் பேட்டை, அரக்கோணம். வ. ஆ) அவர்களுக்குத் தமிழ்ச்சிட்டு ஓராண்டுக்கு இலவசமாக விடுக்கப் பெறும்.

இம்மாதப் புதிர்:

பாரியும் ஓரியும் தேங்காய் விற்பவர்கள். ஒருநாள் இருவரும் மாந்தோப்பு ஒன்றுக்குச் சென்றனர். ஆளுக்கு ஒரு மூட்டை மாம் பழங்கள் வாங்கிக்கொண்டனர். [1 மூட்டை 100 பழங்கள்]அவர்கள் வெளியே வர 100 வாயிற்படிகளைக் கடக்க வேண்டும். வாயிற் படிகள் எல்லாவற்றிலும் ஒவ்வொரு காவல்காரர் இருந்தார். அவர்கள் ஒவ்வொருவரும் மூட்டை ஒன்றுக்கு ஒவ்வொரு பழம் கேட்டனர். இதைக் கேட்ட பாரியும் ஓரியும் திகைத்தனர். 100 வாயிற் படிகளுக்கும் ஒவ்வொன்று கொடுத்தால் மூட்டை காலிதானே. தேங்காய் வணிகர்கள் மாங்காய் வணிகராக வந்ததன் விளைவு இது. அவர்கள் வெளியே வர நீங்கள் ஒரு வழி சொல்லுங்கள் பார்ப்போம். மூட்டை காலியாகக் கூடாது.

-இப்புதிரை எழுதியவர்:

இரா. வ சனார்த்தனன், பள்ளிநேலியனூர் (அஞ்)
விழுப்புரம் வட்டம். தெ. ஆ. மாவட்டம்.

விடை: அடுத்த இதழில்.

△ பிற்காலத் தனித்தமிழ் வளர்ச்சிக்கு இக்கால இளங் குமுகாயத் திற்கு நாம் ஊட்டுகின்ற தனித்தமிழ்ப் பற்றே நிலைவேராகும் என்பது வெள்ளிடைமலை. தனித்தமிழ்ப்பற்று வளர, தொடக்கப்பள்ளி முதலே சிறுர்களுக்கும் சிறுமிகளுக்கும் தனித்தமிழில் பாடல்களும், கதைப் பாடல்களும், கதைகளும் கற்பிக்க வேண்டும் தமிழ்ச்சிட்டில் இதழ் தொறும் 'பாடிப்பழகுங்கள்' தலைப்பில்வரும் பாடல்களும், ஆண்டு மல ரில் வந்த 'மூட ஆமை' கதைப் பாட்டும் நிறை செய்கின்றன. 'மூட ஆமை' போன்ற கதைப் பாடல்களை இதழ்தொறும் வெளியிட இயலா தெனினும் மூன்று திங்களுக்கொரு முறையாவது வெளியிட்டு, மாண வர்களுக்கு அப்பாடல்களைக் கற்பிப்பதன் வழியாவது தமிழ்த்தொண்டு செய்யும் பேற்றினை என் போன்ற ஆசிரியர்களுக்கு நல்குவீர்களெனக் காத்திருக்கிறேன்.

கோ. சண்முகானந்தம், ஆசிரியர்,
கோட்டேரி சிற்றூர், திருமுதுகுன்றம் வட்டம்.

△ இதழில் வெளியாகும் பகுதிகள் அனைத்தும் சிறப்பாக அமைந்திருக்கின்றன. இத்துடன் தமிழ் மொழியில் விரவிக்கிடக்கும் அளவற்ற பிறமொழிச் சொற்களை என்போன்ற இளைஞர் அறிந்து அதனை விலக்கித் தனித் தமிழில் எழுத "தமிழ்ச்சொல்லும் பிற சொல் லும்" என்ற பகுதியையும், தமிழ்ச் சொற்கள் சிலவற்றிற்கும் இலக் கணப் பிழையான சொற்களைத் தெரிந்துகொள்வதற்கும், தெரியாத பல செய்திகளைத் தெரிந்து கொள்வதற்கும் "வினு–விடை"ப் பகுதியையும் இணைத்து வெளியிட்டீர்களானுல், மிக்க நன்றி சொல்லக் கடமைப் பட்டவனுவேன்"

கு. வெற்றியழகன், சென்னை–5.

△ அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, என் அன்பு வணக்கம். தமிழ கத்தின் சிறுர்க்கெல்லாம் தனித் தமிழிலேயே பாடம் புகட்டியும், பண்பை வளர்த்தும், தன்னைத்தான் புரிந்துகொள்ளச் செய்தும் வரு கின்ற தங்கள் அரும்பணி தொடர என் துணை என்றென்றும் உங்க ளுக்கு இருக்கும் என உறுதி கூறுகிறேன். மற்றும் தமிழ்ச்சிட்டின் மூலம் ஒரு கட்டுரைப் போட்டியைத் (சிறுர்க்கு மட்டும்) தொடங்க வேண்டுகிறேன். மற்றும் திங்கள் தோறும் 'தென்மொழி'யும் 'தமிழ்ச் சிட்டு'ம் முதல் நாளிலேயே கிடைக்காமல் போனுலும் தாழ்வில்லை. ஆனுல் முதல் கிழமையில்கூட பெறமுடிவதில்லை என்பதால், படிக்கும் ஆர்வ மிகுதியால் வருத்தமே ஏற்படுகிறது. இனி, திங்களின் முதல் கிழமையிலேயே இதழ்களை வெளியிட வேண்டுகிறேன்.

நா. வேங்கடாசலம், அல்லிக்குட்டை, சேலம்–3.

△ வணக்கம் பல, "இன்னு நாற்பது" "இனியவை நாற்பது" போன்ற சிற்றிலக்கியங்களைத் தமிழ்ச்சிட்டில் வெளியிட்டால் சிறுர் களுக்கு நன்மை பயக்கும் என்று எண்ணுகிறேன். வெளியிடுவீர்களா?

அ. பெரியச்சாமி, சேதுக்கண்ணம்மாள் விடுதி, பூண்டி.

பயன் மொழிகள்!

O மூங்கில்கள் தாம் ஒன்றோடொன்று உரசித் தீயை உண்டாக்கி, அருகிலுள்ள சந்தன மரத்தைக் கொளுத்தினாலும், அதன் மணம் காடு முழுவதும் வீசிக்கொண்டிருக்கும். தீக்குக் காரணமான மூங்கிற் புதரோ, தானும் அத்தீயில் கருகி யழிவதல்லால், பிறர்க்கு ஒரு பயனையும் கொடுக்காது. அதுபோல் நல்லோரைக் கெடுக்க முனையும் தீயோர், அந்நினைவால் தாமே அழிந்து போவரேயன்றி, நல்லோர் அவர்கள் தரும் துயரால் ஒருபொழுதும் கெட்டுவிட மாட்டார்கள்.

O வானத்தில் எத்தனை விண்மீன்கள் இருப்பினும் ஒரு நிலவு தரும் வெளிச்சத்திற்கு ஈடாகா. அதுபோல் கல்லார் எத்தனைப் பேர் தம்முள் ஒன்றுகூடி நின்றாலும், கற்றவர் ஒருவர்க்கு ஈடாக மாட்டார்கள்.

O எவ்வகையான பராமரிப்பும் செய்யாமற் போனாலும் பனைமரம் தொடர்ந்து எல்லா வகையிலும் பயன் தருகிறது. தொடக்கத்தில் மட்டும் பேணி வளர்த்தால் தென்னைமரம் ஒருசில வகைகளில் பயன் தருகின்றது. பாக்கு மரமோ தொடர்த்து பேணி வந்தால் சிறு அளவில் பயன்பட்டு வருகின்றது. வாழைமரமோ நன்றாகப் பேணி வளர்த்தாலும் ஒரே ஒருமுறைதான் பயன் தருகின்றது. இவற்றில் பனைபோல் மேலோர் பிறரிடத்து நன்மை பெறாவிடினும் தாம் தொடர்ந்து அவர்களுக்கு எல்லாவகையிலும் நன்மை செய்து வருவர். இடைப்பட்ட தன்மையினர் தென்னைபோல் தமக்கு நன்றி செய்தார்க்கு மட்டுமே சிலவகையில் நன்மை செய்வர். ஆனால் கடைப்பட்டவரோ பாக்கு மரம்போல் பிறரிடம் நிறைய பெற்றுக் குறையச் செய்வர். அவ்வாறு செய்தாலும் வாழை மரம் போல் ஒரே ஒருமுறைதான் நன்றி செய்வர்.

O குயிலும் காக்கையும் நிறத்தில் ஒன்றுபட்டுக் காணப்பட்டாலும், குயிலின் குரல் காக்கையைவிட இனிமை பயக்கின்றது. அதுபோல் கற்றவரும் கல்லாதவரும் ஒரே நிலையில் இருந்தாலும் சொல்திறமை அவர்களைக் காட்டிக் கொடுத்து விடுகின்றது.

O பசும்பாலை வீடுதோறும் சென்று விலைகூவி விற்கவேண்டும். ஆனால் கள்ளோ இருந்த இடத்தில் இருந்துகொண்டே விலை போகும். அவைபோல் சான்றோரின் அறிவு விலை போவது கடினம். தீயவரின் பொய் நடிப்பையே எல்லாரும் விரும்பி நாடி வந்து தீமையுறுவர்.

O உலகில் பொருளை ஈட்டுதலும் துன்பம்; பேணுதலும் துன்பம்; அதைச் செலவழித்தலும் துன்பம்; அதை முற்றும் இழந்து போதலும் துன்பம்!

(நீதி வெண்பாக் கருத்துகள்)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.